மாலை முரசு

பக்கங்கள் 15+ 03

## டக்ளஸ் தேவானந்தா வைத்தியசாலையில்



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சிறைச் 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 15 செவ்வாய்க்கிழமை 30.12.2025 | அதிர்வு 153

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# சிறையில் டக்ளஸுக்கு அச்சுறுத்தல் இல்லை!

## சுரேன் ராகவனின் கருத்துக்கு நீதி அமைச்சர் இப்படி பதில்



மஹர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இதுவரை எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்பு தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான சுரேன் ராகவன் நேற்று பகிரங்கமாகக் கூறியிருந்தார். 03

# தையிட்டி விகாரை காணியை மக்களிடம் மீள வழங்குங்கள்!

## அரசிடம் நாக விகாரை விகாராதிபதி கோரிக்கை





(எஸ்.நிதர்ஷன்)

"தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி பொதுமக்களுடையது. அதனை அந்த மக்களுக்கே வழங்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. அதனை நான் அரசுக்கும் கூறியுள்ளேன்."

- இவ்வாறு யாழ். நாக விகாரையின் விகாராதிபதி விமலதர்ம தேரர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தையிட்டி விகாரை 03



# வெளிநாட்டு ஒப்பந்தத்துக்கமைய கஞ்சா கடத்தல்: நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் மடக்கிப் பிடிப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

வெளிநாட்டிலிருந்து வந்த உத்தரவுக்கு அமைய யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப்பொருளைக் கடத்திச் சென்ற பிரதேச சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் போதை வியாபாரி ஒருவரிடம் கஞ்சா போதைப்பொருளை கைமாற்றம் செய்யப் போதைப்பொருளுடன் பயணிப்பதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நல்லூர் சங்கிலியன் பூங்காவுக்கு அண்மையாக வைத்து அந்த நபரை மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில், அவரது உடைமையில் இருந்து 4 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளைப் பொலிஸார் மீட்டனர்.

அதனையடுத்து அவரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை தான் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் எனவும் , வெளிநாட்டில் இருந்து வந்த ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில், ஒரு நபரிடம் இருந்து இதனைப் பெற்று, யாழ். நகர் பகுதிக்கு வரும் ஒருவரிடம் அதனைக் கையளிக்கச் சென்றார் எனவும் கூறினார். மேற்படி நபரைப் பொலிஸ் நிலையத் தில் தடுத்து வைத்து பொலிஸார்விசாரணைகளைமுன்னெடுத்துள்ள அதே வேளை, மேற்படி நபரிடம் கஞ்சா போதைப் பொருளைக் கொடுத்தவர் மற்றும் அதனை வாங்கக் காத்திருந்தவர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# கடலில் மூழ்கி காணாமல்போன இளைஞர் இரண்டு நாள்களின் பின் சடலமாக மீட்பு!

(பூ.லின்ரன்)

யாழ். தாளையடி கடலில் நண்பர்களுடன் நீராடச் சென்ற நிலையில் காணாமல் போன இளைஞர், இரண்டு நாள்களின் பின்னர் சடலமாகக் கரையொதுங்கியுள்ளார்.

உடுத்துறையைச் சேர்ந்த உதைப்பந்தாட்ட வீரரான 27 வயதுடைய ஜெசிந்தன் என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

மேற்படி இளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பர்களுடன் தாளையடி கடலில் நீராடிக்கொண்டிருந்த வேளை கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போனார்.

இதனையடுத்து கடந்த இரண்டு நாட்களாக இளைஞரை அந்தப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள், கடலில் தேடிய நிலையில் இன்று திங்கட்கிழமை அவரின் சடலம் அந்தப் பகுதியில் கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்துள்ளனர்.





குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
GSM
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# மாஞ்சோலைவைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் செல்ல பயமாக உள்ளது!

## சிகிச்சைக்காக சென்ற இளைஞன் பாதிக்கப்பட்டுள்ளார் என்று அவரது சகோதரி கண்ணீர் மல்க தெரிவிப்பு




(பா.சதீசன்)

மாஞ்சோலை வைத்தியசாலைக்குப் பிள்ளைகளைச் சிகிச்சைக்குக் கொண்டு வர பயமாக உள்ளது. சிகிச்சைக்காக சென்ற இளைஞன் ஒரவரும் பாதிக்கப் பட்டுள்ளார் என்று அவரது சகோதரி கண்ணீர் மல்க தெரிவித்திருந்தார்.

உணவு ஒவ்வாமை காரணமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி உயிரிழந்த நிலையில், அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து நீதிகோரி முல்லைத்தீவு மக்களால் முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த, இந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டார் என்று கூறப்படும் இளைஞன் ஒருவரின் சகோதரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

27 வயதுடைய எனது சகோதரர் ஒருவர் வீதி விபத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்திருந்தோம். மூன்று மாதமாகக் கை முறிந்ததாக கூறி பீஓபி போட்டிருந்தார்கள். ஆனால் கை முறியவில்லை. கையில் நரம்பு அறுந்திருந்தது. ஆனால் அதனை கண்டுபிடிக்க முடியாமல் முறிவென கூறி பீஓபி போட்டிருந்தார்கள். அதனால் எனது சகோதரரின் கை பாரிசவாதமாக வந்துவிட்டது.

வவுனியாவில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று எலும்பு முறிவு வைத்தியரிடம் காட்டிய போது வைத்தியர் பார்த்து விட்டு, இது எலும்புப் பிரச்சினை இல்லை. நரம்புப் பிரச்சினை என்று தெரிவித்தார். அப்போ இங்குள்ள வைத்தியருக்கு அது தெரியாதா. தற்போது தம்பி வலது கையினால் சாப்பிட முடியாமல் உள்ளார். வாழ்க்கையை இழந்துள்ளார்.

பின்னர் நரம்பு வைத்தியரிடம் கொண்டு சென்று காட்டிய போது நாங்கள் கொண்டு வர தாமதமாகிவிட்டது என்றும் கழுத்திலிருந்து முழங்கை வரை வரும் நரம்பு அழுகிவிட்டது என்றும் தெரிவித்துள்ளனர்.

அதனால் நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்ற போது வைத்தியசாலை நிர்வாகம் கூப்பிட்டு கதைத்தது. ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம் என்று கூறியது.

தற்போது இந்தப் பிள்ளையின் அரணத்திலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த பிள்ளையின் நீதி கிடைக்க வேண்டும் என கேட்பது போல் எனது தம்பிக்கும் நீதி கேட்டே வந்திருக்கின்றேன்.

எனக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள் இங்கே மாஞ்சோலை வைத்தியசாலைக்கு பிள்ளைகளை கொண்டுவர பயமாக இருக்கிறது.- என்றார்.

---

## தையிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள காணி, பொதுமக்களின் காணி என நீதி அமைச்சர் , ஜனாதிபதி உள்ளிட்ட அரச தரப்புக்களுக்கு நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

இந்தப் பிரச்சினையை அரசியலாக்கி முரண்பாடுகளை வளர்க்க வேண்டாம் எனத் தமிழ் , சிங்கள மக்களிடம் கோருகின்றேன்.

காணிகளை காணி உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும்.

அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை."
- என்றார்.

---

## சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பதில் அளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் இன்று ஊடகங்களிடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சிறையில் டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் தொடர்பில் எவ்வித முறைப்பாடுகளும் இதுவரை பதிவாகவில்லை.

எவ்வாறாயினும், டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்பு தொடர்பில் ஏதேனும் சந்தேகங்கள் அல்லது முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை முறையாகச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், அவற்றை ஆராயந்து நடவடிக்கை எடுக்கப்படும்."
- என்றார்.

---

## டக்ளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

அதன்படி, அவர் மஹர சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு அவரது தனிப்பட்ட பாவனைக்காக இராணுவத்தால் வழங்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்று, 2019 ஆம் ஆண்டு பாதாள உலகக் குழு உறுப்பினரான மாகந்துர மதூஷிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கண்டெடுக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்காகவே டக்ளஸ் தேவானந்தா கடந்த 26 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசின் மீதான குற்றச்சாட்டு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தொலைநோக்குப் பார்வை இல்லை. மாறாக மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிப்பதற்கு அது முயற்சித்து வருகின்றது. ஜனநாயகத்துக்கான வெளிப்படைத் தன்மையை இல்லாமலாக்குவது அரசாங்கத்தின் பணியல்ல என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

ஆளும்தரப்பின்நடவடிக்கைகளை ஆட்சேபித்து - எதிர்த்து - சரியான வழிக்குக் கொண்டுவரச் செய்வதுதான் எதிர்க்கட்சித் தலைவரின் பணி. அதனால் எப்போதுமே ஆட்சித் தரப்பின் நடவடிக்கைகளை கரித்துக் கொட்டி விமர்சிப்பது அவரது வேலையாக இருக்கும். ஆனால் நாட்டைக் கட்டி எழுப்புவதற்கான தொலைநோக்குப் பார்வை நடவடிக்கைகளை விடுத்து, ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிப்பதற்கு அரசு முயலுகின்றது என்ற எதிர்க்கட்சித் தலைவரின் இந்தக் குற்றச்சாட்டு வெறும் அபவாதக் கூற்று அல்ல. அல்லது எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஆளும் தரப்புக்கு எதிராக அடுக்கும் அடிப்படையற்ற குற்றச்சாட்டும் அல்ல.

இந்த அரசுக்கு மக்கள் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மூலம், தேர்தலுக்கு முன்னர் தாம் அளித்த வாக்குறுதிப்படி நாட்டுக்கு ஏற்ற புதிய அரசமைப்பு ஒன்றை - முறைமை மாற்றம் ஒன்றை - இந்த அரசு கொண்டுவர வேண்டும் என்பது மக்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

அதுவும் கூட ஜனநாயக விழுமியங்களையும் செழுமையையும் மேலும் மேன்மைப்படுத்தும் ஒரு முறைமையைத்தான் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் அத்தகைய ஆட்சி முறைமை ஒன்றை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்காமல், நாட்டில் ஒரு கட்சி ஆட்சி முறையை நோக்கிய ஒரு பாதையை நாடி இந்த அரசு நகர்வதாக மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த அரசின் நடவடிக்கைகள் அதனை உறுதிப்படுத்துகின்றன.

மாகாண ரீதியில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தல்களை நடத்துவதற்கான முழு அதிகாரமும் இருந்தும், அதனை முன்னெடுக்காமல் வேண்டுமென்றே இந்த அரசு இழுத்தடிக்கின்றது. போதாக்குறைக்கு பிராந்தியங்களில் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் இருக்கத்தக்கதாக அந்தத் தரப்புகளை எல்லாம் புறக்கணித்து விட்டு, பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு பிரஜாசக்தி என்ற பெயரில் மக்களால் நிராகரிக்கப்பட்ட தங்களின் உள்ளூர் பிரகிருதிகளை வைத்து நிர்வாக விடயங்களை அரசு கையாள முயல்கின்றது. தன்னுடைய அரசியல் அதிகாரங்களை அதற்கு பயன்படுத்துகின்றது.

இந்தப் போக்கு ஒரு வகையில் ஒரு கட்சி ஆட்சியை ஏற்படுத்தும் இந்த ஆட்சித் தரப்பின் எதேச்சாதிகாரமாகவும் ஜனநாயக நெறிமுறைகளை கீழ்மைப்படுத்தும் நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.

இந்தப் பின்புலத்தில் மக்களின் ஜனநாயக உரிமைகளை இந்த அரசு மோசமாக்குகின்றது என்ற எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது

### சிறுமி டினோஜாவின் மரணத்தில்

# மருத்துவத் தவறு இடம்பெற்றிருப்பின் உரியவர்கள் தண்டிக்கப்படவேண்டும்!

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

சிறுமி டினோஜாவின் சந்தேகத்துக்கிடமான மரணத்துக்கு நீதியான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். மருத்துவர் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர் சிலரின் அசமந்தப் போக்கு மற்றும் முறையற்ற மருந்து வழங்கல் என்பன சிறுமியின் மரணத்துக்குக் காரணமாக இருப்பின் உரியவர்கள் முறைப்படி தண்டிக்கப்படவேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

சிறுமி டினோஜாவின் மரணத்துக்கு நீதி கோரி நேற்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனைகளிலேயே முல்லைத்தீவும் மன்னாரும் தான் மிகவும் பின்தங்கி இருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது மாவட்ட பொது மருத்துவமனையிலாவது சிறந்த மருத்துவ வசதி காணப்படவேண்டும். ஆனால் முல்லைத்தீவும் மன்னாரும் இன்றுவரை ஏனைய மாவட்ட மருத்துவமனைகளுக்கு நிகராக இல்லை. வளங்களில் இன்னமும் சமத்துவமற்ற நிலையில் உள்ளன.

எங்களின் பிள்ளை டினோஜாவின் மரணம் ஏற்றுக்கொள்ள இயலாதது. மருத்துவமனைக்கு உள்ளும் புறமும் பலராலும் மருத்துவமனை மீதான முறைப்பாடுகள்முன்வைக்கப்படுகின்றன. அதிக அளவாக மருந்துகள் பிள்ளைக்கு வழங்கப்பட்டமையே மரணத்துக்கு காரணம் எனப் பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பிள்ளையின் மரணத்துக்கான நீதியானவிசாரணைமேற்கொள்ளப்படவேண்டும். மருத்துவர் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர் சிலரின் அசமந்த போக்கு, முறையற்ற மருந்து வழங்கல் காரணமாக இருந்தால் அவர்கள் முறைப்படி தண்டிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு பிரச்சினை நிகழும் போதும் அது தொடர்பில் பணிப்பாளரோடு கதைக்க முனைந்தால் அவர் கொழும்பில் இருக்கிறார் என்ற தகவல் வருகிறது. மருத்துவர்கள் தொலைபேசி வழியில் மருந்துகளை பரிந்துரைக்கிறார்கள் என்ற முறைப்பாடு பல சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெறுகின்றது.






இறுக்கமற்ற நிர்வாக நடைமுறை மேற்படி மருத்துவமனையில் நிலவுவதாக உள்ளிருந்தும் சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. முன்னைய காலங்களில் இருந்த பணிப்பாளர்கள் மிகவும் பற்றுறுதியோடு பணிபுரிந்தனர். ஒரு மரணமேனும் நிகழ்ந்துவிடக்கூடாது என இரவு பகலாக உழைத்தனர். இப்போதுள்ள நிர்வாகம் அந்த இறுக்கமான நடைமுறைகளில் இருந்து விலகி விடுகிறதோ என எண்ணத்தோன்றுகிறது.

இங்கு கூடியிருக்கிற அவ்வளவு மக்களும் ஓரிருவர் தூண்டுதலால் வந்து சேர்ந்தவர்கள் அல்ல. ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் அசமந்தப்போக்கோடு மருத்துவ சேவை வழங்கப்படுவதில் அனுபவப்பட்டு இந்தப்பிள்ளையின் மரணத்திலும் அத்தகைய பிழை ஏற்பட்டிருக்கும் என ஆழமாக நம்புகிறார்கள்.

அரசு இதில் உடனடியாகத் தலையிட்டு நீதியான விசாரணை நடைபெற வழி விடவேண்டும். தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். உணவு ஒவ்வாமையால் ஒரு மரணம் சம்பவிக்கிறது என்பதை எங்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

வீட்டில் இருந்தும், விடுதியில் இருந்தும் தொலைபேசி வழியில் மருத்துவம் பார்ப்பது இங்கு அதிகரித்திருப்பதாக மக்கள் முறையிடுகின்றனர்.

தமது நோய் நிலைமைகளைக் குணப்படுத்தவேண்டும் என்ற நோக்குடனேயே வைத்தியசாலைக்கு மக்கள் வருகை தருகின்றார்களே தவிர, உயிரிழப்பதற்கு மக்கள் இங்கு வருகைதருவதில்லை.

ஆனால் இந்த மருத்துவமனையில் தொடர்சியாக இடம்பெற்றுவரும் இவ்வாறான சந்தேகத்துக்கிடமான மரணங்களால் மாஞ்சோலை வைத்தியசாலையை மரணச்சோலை என மக்கள் கூறுகின்றனர்.

இந்த சந்தேகத்துக்கிடமான மரணத்துக்கு நீதிகிடைக்கவேண்டுமென உரிய தரப்பினரை வலியுறுத்துவேன். இந்த மரணத்துக்குநீதிகோரிநாடாளுமன்றிலும் எனது குரல் ஒலிக்கும்.

இந்த சந்தேகத்துக்கிடமான மரணத்துடன் தொடர்புடைய மருத்துவரைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன என்றும் பலரும் எம்மிடம் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியசாலையில் இருப்பதில்லை என்ற முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. தமது வீடுகளில் இருந்துகொண்டு தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்ற வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் இங்கு இருக்கத் தேவையில்லை.

அசமந்தப்போக்கான வைத்தியசாலைச் செயற்பாடுகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும். இந்த சந்தேகத்துக்கிடமான மரணத்துக்கும் நீதி கிடைக்கவேண்டும். – என்றார்..





# திரௌபதியம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று!

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

வரலாற்று சிறப்பு வாய்ந்த புத்தளம் உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவ விழாவில் இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

அதிகாலை 3 மணிக்கு விஷேட அபிஷேகப் பூஜைகளைத் தொடர்ந்து, காலை 5 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெற்றது.காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து, அம்பாள் உள்வீதி வலம் வந்து இரதத்தில் எழுந்தருளினார்.

பக்தர்களின் 'அரோஹரா' கோஷம் முழங்க தேர் வெளிவீதி உலா வந்தது. இதில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.




# முதியோர்களுக்கான ஆன்மீக யாத்திரை!

(நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரின் ஆலோசனையிலும் உதவிப் பிரதேச செயலாளரின் வழிகாட்டலிலும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாலமுனை முதியோர் சங்கங்களை இணைந்ததாக ஆன்மீக யாத்திரை இன்று இடம்பெற்றது.

இதன்போது பிரசித்திபெற்ற காத்தான்குடி பூர்வீக நூதனசாலை, அல் அக்ஸா பள்ளிவாசல் , முதியோர் இல்லம், ஏறாவூர் கடற்கரை பூங்கா, புற்று நோய் வைத்திய சாலை போன்ற இடங்களை முதியோர் பார்வையிட்டனர்.

இந்தப் பயணத்தில் பிரதேச செயலக நிதி உதவியாளர் தலைமையில் முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர், சமூக சேவைகள் பிரிவு உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.





# ஜட்சன் கல்லூரி மாணவர்கள் கொழும்புக்கு வருகை தந்தனர்!

(அஷ்ரப் ஏ சமத்)

பாகிஸ்தான், லாகூரில் உள்ள ஜட்சன் கல்லூரியைச் சேர்ந்த 41 மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் அடங்கிய குழுவினர், கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு அறிமுக விஜயத்தை மேற்கொண்டார்கள்.

கொழும்பில் நடைபெறும் 12 வயதுக்கு உட்பட்டோருக்கான கால்பந்து மற்றும் ஹாக்கி போட்டிகளில் பங்கேற்பதற்கான இந்த மாணவர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்த விஜயத்தின் போது, இலங்கையில் பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) ஃபஹீம் உல் அஜீஸ் மற்றும் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்தனர்.

மாணவர்களை அன்புடன் வரவேற்ற தூதுவர், விளையாட்டுத் துறையின் ஊடாக பாகிஸ்தானைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் தூதுவர்களாக மாணவர்களின் பங்களிப்பைப் பாராட்டினார். மேலும், அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அவர் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



பாகிஸ்தான் – இலங்கை இடையிலான நீண்டகால நட்பு, பகிரப்பட்ட விழுமியங்கள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையே வளர்ந்து வரும் ஒத்துழைப்பு ஆகியவற்றை விளக்கும் விரிவான விளக்கக்காட்சி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடல் அமர்வில், ராஜதந்திரம், இரு நாட்டு மக்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் பரஸ்பர புரிதல், விளையாட்டின் முக்கியத்துவம் குறித்து மாணவர்கள் தூதுவருடன் வெளிப்படையாகக் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இந்த விஜயம் இளம் தலைமுறையினரை ஊக்குவிப்பதற்கும், பாகிஸ்தான் மற்றும் இலங்கை மக்களுக்கிடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் ஒரு பயனுள்ள தளமாக அமைந்ததோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மீண்டும் உறுதிப்படுத்தியது என்று தெரிவிக்கப்பட்டது.

# சந்நிதியான்ஆச்சிரமத்தில் வருடாந்த திருவாசகப் பெருவிழா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை காலத்தில் நடைபெறும் திருவாசக விழாவானது, எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நடராஜர் மற்றும் நாயன்மார்களின் திருவுருவங்களுடன் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக சந்நிதி ஆலயத்தில் இருந்து மங்கள இசையுடன் கூடிய அடியார்களின் சிவபுராண ஓதுதலுடன் ஆச்சிரமத்துக்கு எடுத்துவரப்பட்டு விசேட பூசை வழிபாடுகளும் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து, தி.செல்வமனோகரனின் விசேட அருளுரை இடம்பெறும்.



## மன்னார் நகர பிரதேச செயலகத்தில் வைத்து

# பெண் கிராம அலுவலரைத் தாக்க முயற்சி போராட்டத்தில் ஈடுபட்ட கிராம அலுவலர்கள்!

### உரிய தீர்வு கிடைக்கும் வரை சுகவீனப் போராட்டத்துக்கு அறிவிப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி முதல் அடையாள பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்ட நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மறு அறிவித்தல்வரை சுகவீன விடுமுறைபோராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் நகர பிரதேச செயலகத்தில் புதுக் குடியிருப்பு கிராம அலுவலர் தனது அரச கடமையில்ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, பிரதேச செயலகத்துக்குள் நுழைந்த கும்பல் குறித்த பெண் கிராம அலுவலரைத் தாக்க முற்பட்டதோடு, அவரை தகாத வார்த்தைகளால் பேசி, அவரது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளது.

அவர் ஒரு பெண் கிராம அலுவலர் என்பதால் அவரது கௌரவத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர். குறித்த சம்பவத்துக்குக் கிராம அலுவலர்கள் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.


இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் நகர பிரதேச செயலகத்துக்கு முன்னாள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஒன்று கூடி கருப்பு பட்டி அணிந்து பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்பை தெரிவித்தனர்.

குறித்த பெண் கிராம அலுவலரைத் தாக்க முற்பட்ட குறித்த நபர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நாட்டில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரண பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் பாதிக்கப்படாதவர்களும் தமக்கான நிவாரணங்களை வழங்குமாறு தொடர்ந்து பல்வேறு விதங்களில் தம்மை அச்சுறுத்தி வருகின்றனர் என்றும் தாங்கள் அரச சுற்று நிருபங்களுக்கு அமையவே தமது கடமைகளை பல்வேறு இடர்களுக்கு மத்தியில் முன்னெடுத்து வருகின்றனர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட கிராம அலுவலர் கள் தெரிவித்தனர்.

குறித்த பெண் கிராம அலுவலரைத் தாக்க முற்பட்டவர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், கிராம அலுவலர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமக்கு உரிய தீர்வு கிடைக்கும்வரை இன்று செவ்வாய்க்கிழமை முதல் தொடர் சுகவீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்றும் ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம அலுவலகர் சங்கத்தின் மன்னார் நகர பிரதேச கிளையின் தலைவர் கமலேஸ்வரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.





# தன்னியக்க வெள்ள வீதித்தடை உபகரணத்தை கண்டுபிடித்த மாணவனுக்கு ரூ. 50 ஆயிரம் பரிசு

(வி.ரி.சகாதேவராஜா)

சமகாலத்துக்குப் பொருத்தமான தன்னியக்க வெள்ள வீதித்தடை உபகரணத்தை கண்டுபிடித்த சம்மாந்துறை மாணவனுக்கு ஊக்குவிப்பாக 50 ஆயிரம் ரூபா பரிசை சம்மாந்துறை பிரதேச சபை வழங்கிக் கௌரவித்தது.

சம்மாந்துறை அல் – அமீர் வித்தியாலத்தின் தரம் 09 கல்வி பயிலும் மாணவன் ஏ.எம்.எம்.அப்ஹாம் தன்னியக்க வெள்ள வீதித் தடை உபகரணத்தை கண்டுபிடித்து மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றிருந்தார்.

அவரின் கண்டுபிடிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் ஐம்பது ஆயிரம் ரூபா வழங்குவதற்கு சம்மாந்துறை பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களின் ஏகமனதாக ஆதரவளித்தனர்.

சம்மாந்துறை பிரதேச சபையின் விசேட அமர்வு தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தலைமையில் சபா மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பின்னர் சாதனை மாணவனை சபைக்கு அழைத்து அங்கு தவிசாளர் மாஹிர் காசோலை வழங்கிக் கௌரவித்தார்.







# வறுமை ஒழிப்பு செயற்குழுவுக்கு கற்பிட்டியில் பயிற்சிபட்டறை!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட “பிரஜா சக்தி வறுமை ஒழிப்பு தேசிய வேலைத் திட்டத்தின்” கீழ், சமூக அபிவிருத்திச் சபையின் செயற்குழு உத்தியோகத்தர்களைத் தெளிவூட்டும் விசேட பயிற்சிப்பட்டறை நேற்று திங்கட்கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த வேலைத்திட்டத்தின் வளவாளராக கற்பிட்டி பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கலந்து கொண்டார்.

வறுமையை ஒழிப்பதற்கான தேசிய இலக்குகளைஅடைந்துகொள்வதற்காக, சமூக மட்டத்தில் செயற்படும் சமூக அபிவிருத்திச் சபைகளின் பங்களிப்பை வலுப்படுத்துவதும், அதற்காக கள உத்தியோகத்தர்களின் செயலில் பங்களிப்பு மற்றும் ஒருங்கிணைப்பை முறைப்படுத்துவதும் இந்தப் பயிற்சியின் பிரதான நோக்கமாகும்.

இதன்போது பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பயனாளிகளை வலுப்படுத்துவது குறித்து உத்தியோகத்தர்களுக்குத் தெளிவூட்டப்பட்டது. இந்தத் தேசிய வேலைத் திட்டத்தைக் கிராம மட்டத்தில் வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இந்த நிகழ்வில் கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளர், பிரஜா சக்தி தலைவர்கள் உட்பட பிரதேசத்தின் பல கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

அவர்களுள் நிர்வாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை முகாமையாளர் உட்பட கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.





### ‘டித்வா’ புயலால் சேதமடைந்த

# பதுளை மாவட்டப் பாடசாலைகளை கட்டியெழுப்பும் பணியில் கடற்படை

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

‘டித்வா’ புயலால் சேதமடைந்த பதுளை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளை மீள கட்டியெழுப்புவதற்காக பங்களிக்கும் இலங்கை கடற்படை, தற்போது பதுளை மற்றும் பசறை கல்வி வலயங்களில் சேதமடைந்த பாடசாலைகளில் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, பதுளை கல்வி வலயங்களில் பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளை மீண்டும் கட்டியெழுப்ப தொழில்நுட்ப மற்றும் கலைத்துவ ஆதரவை வழங்குவதன் கீழ், பதுளை பிபிலேகம மகா வித்தியாலயம், அல் அமீன் வித்தியாலயம், ஸ்ரீ கனேஷா தமிழ் வித்தியாலயம், விக்னேஷ்வரா தமிழ் வித்தியாலயம் மற்றும் மிஹிது பாலர் பாடசாலை ஆகியவை கடற்படையின் கலைத்துவ பங்களிடன் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், “கிளீன் ஸ்ரீ லங்கா” தேசிய திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஜனாதிபதி பணிக்குழுவின் முக்கிய பங்காளியாக இருக்கும் இலங்கை கடற்படை, “மகிழ்ச்சி நிறைந்த பாடசாலை” என்ற கருப்பொருளை நனவாக்கும் வகையில் பாடசாலை வளாகங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் தொடர்ந்து பங்களித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.










# வான் தகவல் தொடர்பு கருவிகளை தயாரிக்க விமானப்படை - சென்னை ஐ.ஐ.டி. ஒப்பந்தம்

வான் தகவல் தொடர்பு கருவிகளை தயாரிக்க இந்திய விமானப்படை, சென்னை ஐ.ஐ.டியுடன் (இந்திய தொழில் நுட்பக் கழகம் சென்னை) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

விமானப்படை பயன்பாட்டுக்காக உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வான் தகவல் தொடர்பு கருவிகளை தயாரிக்க முடிவு செய்யப்பட்டது.

இதற்காக விமானப்படையின் மென் பொருள் மேம்பாட்டு மையம் (எஸ்.டி.ஐ) ஐ.ஐ.டி. சென்னையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் தற் சார்பு நிலையை ஏற்படுத்துவதிலும், தற்சார்பு இந்தியா தொலைநோக்கை நனவாக்குவதிலும் இந்த ஒப்பந்தம் மிக முக்கியமான நடவடிக்கை. இந்த ஒப்பந்தத்தில் விமானப்படையின் எஸ்.டி.ஐ. பிரிவு கமாண்டன்ட் ஏர் வைஸ் மார்ஷல் குருஹரி, ஐ.ஐ.டி. சென்னை இயக்குனர் வைத்தியர் காமகோடி, பிர வர்தக் டெக்னாலஜிஸ் பவுண்டேசன் சி.இ.ஓ. வைத்தியர். சங்கர் ராமன் ஆகி யோர் கையெழுத்திட்டனர். இந்த கூட்டு முயற்சி மூலம் இந்திய விமானப்படை மேம்பட்ட எண்கணித முறைகளை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இது நெட் வொர்க்கிங் மற்றும் எண்குறியாக் கம் ஆகியவற்றுக்கு பயன்படும்.

இந்த அமைப்பு, பாதுகாப்பான, நம்பக மான மற்றும் சிறந்த தரவு பரிமாற்றத் துக்கும், நவீன ராணுவ செயல்பாடு களுக்கும் முக்கியமானது. உள்நாட்டு தொழில்நுட்பத்தில் இந்த தகவல் தொடர்பை உருவாக்குவதன் மூலம், வெளிநாட்டு தகவல் தொடர்பு சாதனங் களை சார்ந்திருப்பது குறையும்.

இது குறித்து விமானப்படை கமாண் டன்ட் குருஹரி கூறுகையில்,

“சென்னை ஐ.ஐ.டியுடனான இந்த கூட்டு முயற்சி, பாதுகாப்பு தகவல் தொழில் நுட்பத்தில் தற்சார்பு நிலையை ஏற் படுத்தும் தொலைநோக்கு நடவடிக்கை. கல்வியாளர்களும், விமானப்படை நிபுணத்தவமும் ஒன்றிணையும்போது, அது உள்நாட்டு தொழில்நுட்பத்தில் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுக்கும். இதன் மூலம் விமானப் படையின் வான் தகவல் தொடர்பு மேம படும்.” என்றார்.

ஐ.ஐ.டி. சென்னை இயக்குனர் காம கோடி கூறுகையில்,

“விமானப்படையின் மென்பொருள் மேம்பாட்டு மையத்துடன் இணைந்து செயல்படுவது, உயர் கல்வி நிறுவனங் களும், பாதுகாப்பு படைகளும் இணைந்து செயல்படுவதற்கு உதாரணமாக உள்ளது. மேம்பட்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் பர்பாதுகாப்புக்கு தனது நிபுணத்து வத்தை வழங்குவதில் ஐ.ஐ.டி. சென்னை பெருமிதம் கொள்கிறது. இந்த நட வடிக்கை, தற்சார்பு இந்தியா, நாட்டின் நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத் துத்தல் போன்றவற்றுக்கு பொருத்தமாக உள்ளது. இதன் மூலம் நாட்டின் பாது காப்பு வலுப்பெறும்.” என்றார்.





# அ.தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நெசவாளர்கள் நிலை உயர்வடையும்

## பழனிசாமி உறுதி

அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நெசவாளர்கள் நிலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என பழனிசாமி உறுதி அளித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி, 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன்படி, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருத்தணி மற்றும் திருவள்ளூர் சட்டப்பேரவை தொகுதிகளில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதில், திருத்தணி சட்டப்பேரவை தொகுதியில், வீரகநல்லூரில் பழனிசாமி உரையாற்றுகையில்,

"நான் எழுச்சி பயணம் மேற்கொண்ட அனைத்து தொகுதிகளிலும் மக்களின் வரவேற்பு அமோகமாக உள்ளது. அ.தி.மு.கவின் வெற்றியை மக்களின் எழுச்சியில் பார்க்க முடிகிறது.

அடுத்தாண்டு தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். அ.தி.மு.க. கூட்டணி 210 இடங்களில் வெல்லும். தி.மு.க. ஆட்சியில், அவர்கள் குடும்பம் மட்டும் வளமாகியது. கருணாநிதி, ஸ்டாலின், உதயநிதி, அடுத்து இன்பநிதி. இந்த வாரிசு அரசியல் தேவையா? தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடன் நீட் தேர்வு ரத்து என்றார்கள். ரகசியம் தெரியும் என்றார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.

இப்போது எங்களால் முடியாது என்று சொல்லிவிட்டார் முதல்வர் ஸ்டாலின். இதுதான் அந்த ரகசியம். மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்று அந்தர் பல்டி அடித்துவிட்டது திமுக. 2021 தேர்தலில், கொடுத்த 525 வாக்குறுதிகளில், நான்கில் ஒரு பங்கை கூட தி.மு.க. நிறைவேற்றவில்லை.

விசைத்தறி, கைத்தறி நெசவாளர் நிலை சரிந்துபோய் இருக்கிறது. நெசவாளர் நிலை மீண்டும் சிறக்க அ.தி.மு.க. ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும்." என்று தெரிவித்தார்.

# டில்லியில் பனிமூட்டம்: விமான சேவைகள் ரத்து

கடந்த சில வாரங்களாக டில்லி, உத்தர பிரதேசம், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களில் கடும் பனிமூட்டம் நிலவுகிறது.

பனிமூட்டம் தொடர்பாக டில்லி மற்றும் உத்தர பிரதேசத்துக்கு நேற்று செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த சூழலில் வடஇந்தியா முழுவதும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டு உள்ளன. டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலை நிலவிய கடும் பனிமூட்டம் காரணமாக 128 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.

200 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன. 8 விமானங்கள் வேறு நகரங்களுக்கு திருப்பி விடப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# தாய்வான் எல்லையில் முப்படைகளைத் திரட்டி இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளும் சீனா

தாய்வானை சுற்றியுள்ள முக்கிய பகுதிகளைக் கைப்பற்றுவது மற்றும் முற்றுகையிடுவது போன்ற இராணுவப் பயிற்சிகளை சீனா மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பிரிவினைவாத சக்திகளுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை என சீனா அறிவித்துள்ளது.

இந்த பயிற்சிக்காக முப்படைகளும் அனுப்பப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேரடி துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிபொருள்கள், பயிற்சியின்போது பிரயோகிக்கப்படுவதாக சீன இராணுவம் தெரிவித்துள்ளது.

தாய்வானுக்கு 11 பில்லியன் டொலர் பெறுமதியான நவீன ஆயுத தொகுதியினை விற்பனை செய்வதாக அமெரிக்கா அறிவித்த சில நாள்களில் இந்த பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளுக்கு சீனா கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளதுடன், அமெரிக்க பாதுகாப்பு அமைப்புகள் மீது தடைகளை விதித்துள்ளது.

அதேவேளை, தாய்வான் ஜனாதிபதி அலுவலகம், சீனாவினால் மேற்கொள்ளப்படும் பயிற்சிகளைக் கண்டித்துள்ளதுடன், இது சர்வதேச விதிமுறைகளுக்கு விடுக்கப்பட்ட சவால் எனக் கூறியுள்ளது.







# ஏமன் துறைமுக நகர் மீது சவூதி அரேபியா தாக்குதல்

ஏமனின் முக்கல்லா துறைமுக நகர் மீது சவூதி அரேபியா இன்று வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து பிரிவினைவாத ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டினைத் தொடர்ந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தின் புஜைரா துறைமுகத்திலிருந்து வந்த இரண்டு கப்பல்களில் பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் போர் வாகனங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த ஆயுதங்கள் அமீரகத்தின் ஆதரவு பெற்ற தெற்கு இடைக்கால சபையின் பிரிவினைவாதப் படைகளுக்காகக் கொண்டு வரப்பட்டுள்ளன.

பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதாலேயே இந்த 'மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை' எடுக்கப்பட்டதாக சவூதி தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து ஐக்கிய அரபு அமீரகம் இதுவரை உத்தியோகபூர்வமாக எவ்விதக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

# பங்களாதேஷின் முதல் பெண் பிரதமர் பேகம் கலீடா ஷியா காலமானார்



பங்களாதேஷின் முதல் பெண் பிரதமர் பேகம் கலீடா ஷியா தனது 80 ஆவது வயதில் காலமானார்.

உடல் நலக் குறைவினால் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் இன்று காலமானதாக, பங்களாதேஷ் தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

பேகம் கலீடா ஷியா, 1991ஆம் பங்களாதேஷின் முதல் பெண் பிரதமர் ஆனார்.

2001ஆம் ஆண்டில், மீண்டும் ஆட்சிக்கு வந்த அவர் 2006 ஆம் ஆண்டு வரை பதவி வகித்துள்ளார்.

இந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிரான இயக்கத்திற்கு, கலீடா ஷியா ஆதரவளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 30/12/2025

## துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடையவர் கைது




C3▶






# கனடாவின் டர்ஹம் பிராந்தியத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் 64 பேர் கைது

கனடாவின் டர்ஹம் பிராந்தியத்தில் ஒரு மாதம் நீடித்த சிறு வியாபார கடை திருட்டு ஒழிப்பு நடவடிக்கையின் முடிவில் 64 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்கள் மீது 155 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என டர்ஹம் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சேப் சொப் எனப் பெயரிடப்பட்ட இந்த விசேட நடவடிக்கை 2025 நவம்பர் 10 முதல் டிசம்பர் 16 வரை முன்னெடுக்கப்பட்டது.

அதிக அளவில் திருட்டுகள் நடைபெறும் சில்லறைக் கடைப் பகுதிகளை இலக்காகக் கொண்டு, குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் தெளிவான மற்றும் கண்காணிப்பு மிக்க பொலிஸ் முன்னிலையை ஏற்படுத்தியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

C2▶



# கனடாவில் உறைமழை, பனிப்பொழிவு; மின் தடை அபாயம் குறித்து எச்சரிக்கை

கனடாவின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படக்கூடிய அபாயம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் கிழக்கு பகுதிகளில் உள்ள ஒன்டாரியோ, கியூபெக் மற்றும் அட்லான்டிக் மாகாணங்களில் உறை மழை, பனிப்பொழிவு மற்றும் பலத்த காற்று ஆகியவை கலந்த கடுமையான வானிலை நிலவுகிறது.

இதன் காரணமாக பல பகுதிகளில் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ள நிலையில், மேலும் மின்தடைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக கனடிய சுற்றாடல் திணைக்கள வானிலை நிபுணர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உறைமழையுடன் கூடிய பலத்த காற்று இணைந்து மிகவும் ஆபத்தான சூழலை உருவாக்குவதாக வானிலை நிபுணர் ஜெரால்ட் செங் தெரிவித்தார்.

டொராண்டோ பெரும்பாகப் பகுதி, மான்ட்ரியால் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என கனடிய சுற்றாடல் திணைகக்ளம் எதிர்வுகூறியுள்ளது.

அதேபோல் நியூஃபவுண்ட்லாந்து மற்றும் லாப்ரடார் மாகாணத்தின் பேஸ்ட். ஜார்ஜ், கார்னர் ப்ரூக் போன்ற பகுதிகளிலும் பலத்த காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"உறைமழையால் மின் கம்பிகள், மின் தூண்கள் மற்றும் பிற

C2▶




# வட டொரண்டோ ஓய்வூதிய இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் டொரண்டோ நகரின் நார்த் யார்க் பகுதியில் உள்ள ஓய்வூதிய இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில், முதியவர் ஒருவர் யிரிழந்துள்ளார் என டொராண்டோ பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த தீ விபத்து, ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில், பின்ச் அவென்யூ வெஸ்ட் மற்றும் பாதர்ஸ்ட் ஸ்ட்ரீட் அருகே அமைந்துள்ள ஓய்வூதிய இல்லத்தில் ஏற்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

கட்டடத்தின் நான்காவது மாடியில் உள்ள ஒரு குடியிருப்பு அறையில் தீப் பற்றியது. அந்த மாடியில் உள்ள ஒரு அறையிலிருந்து ஒருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

தீ விரைவாக கட்டுப்படுத்தப்பட்டதுடன், அது அந்த அறையைத் தாண்டி மற்ற பகுதிகளுக்கு பரவவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவசர மருத்துவ சேவையினர் கூறுகையில், தீ விபத்தில் முதியவர் ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் என தெரிவித்தனர்.

பின்னர் பொலிஸ் வெளியிட்ட தகவலின்படி, சுமார் 80 வயதுக்கு மேற்பட்டவராக கருதப்படும் அந்த நபர், தீ விபத்தில் ஏற்பட்ட காயங்களால் உயிரிழந்துள்ளார்.

தீ விபத்துக்கு 21 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டன என தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

தீ அந்த குடியிருப்பு அறையின் வாழும் பகுதியிலேயே இருந்ததுடன், மிகக் குறுகிய நேரத்தில் அணைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

கட்டடத்தின் உள்ளே மிகக் குறைந்த அளவிலேயே புகை இருந்ததால், முழு கட்டிடத்தையும் காலி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என தீயணைப்புப் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.






**கனடாவின்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இதேவேளை, இந்த நடவடிக்கை பொதுமக்கள் பாதுகாப்பை மேம்படுத்துவதும் முக்கிய இலக்காக இருந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் 17 பேர் LCBO கடை திருட்டுகளுடன் தொடர்புடையவர்கள் எனவும், இதனால் 32 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**கனடாவில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

பொருள்களில் பனிக்கட்டிகள் உருவாகுகின்றன.

இதனுடன் மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசினால், அது மிக மோசமான கலவை எனவும் இது மேலும் பல மின்தடைகளுக்கு வழிவகுக்கும் என்றும் ஜெரால்ட் செங் தெரிவித்தார்.

இதற்கிடையில், ஒன்டாரியோ, கியூபெக், நியூ பிரன்ஸ்விக், நோவா ஸ்கோஷியா மற்றும் பிரின்ஸ் எட்வர்ட் தீவு ஆகிய மாகாணங்களின் பல பகுதிகளில் உறைமழை தொடர்ந்து பெய்து வருவதுடன், சில இடங்களில் பனிப்பொழிவும் பதிவாகியுள்ளது.

# கனடாவின் சுகாதாரக் குறைபாடுகள் மீண்டும் வெளிச்சத்துக்கு வந்தன



கனடாவின் சுகாதார அமைப்பில் ஏற்பட்டுள்ள கடுமையான குறைபாடுகள் மீண்டும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

எட்மன்டனில் உள்ள Grey Nuns Community Hospital வைத்தியசாலையில் 44 வயது இந்திய வம்சாவளி நபர் பிரஷாந்த் ஸ்ரீகுமார், 8 மணி நேரம் அவசர சிகிச்சைக்காக காத்திருந்தபோது உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீகுமார் வேலைக்குச் சென்றபோது கடுமையான மார்பு வலியால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு ஆரம்ப சோதனை செய்யப்பட்டாலும், சிகிச்சை அளிக்காமல் காத்திருப்பு அறையில் அமர்த்தப்பட்டார்.

வலி குறைக்க வுலடநழெட மாத்திரைகள் மட்டுமே வழங்கப்பட்டன. 8 மணி நேரம் கழித்து சிகிச்சை அறைக்குள் அழைக்கப்பட்ட சில நொடிகளில் அவர் இதயக் கோளாறால் சரிந்து விழுந்து உயிரிழந்தார்.

அவரது மரணம் அவரது மனைவி மற்றும் 3 குழந்தைகளை பெரிதும் பாதிப்படையச்செய்துள்ளது.

இந்தச் சம்பவம் கனடாவின் அவசர சிகிச்சை வழங்கும் முறையில் உள்ள பாரிய பிழையை வெளிப்படுத்துகிறது.

Golden Hour எனப்படும் முதல் 60 நிமிடங்களில் சிகிச்சை அளித்தால் உயிர் காப்பாற்றும் வாய்ப்பு அதிகம். ஆனால், ஸ்ரீகுமார் 8 மணி நேரம் காத்திருந்தது சுகாதார அமைப்பின் செயலிழப்பை காட்டுகிறது.

கனடாவில் சுமார் 59 இலட்சம் மக்களுக்கு நிலையானிசஐஅயசல உயசந வசதி இல்லை. அவசர சந்திப்புக்காக 24 மணி நேரத்திற்குள் நேரம் கிடைப்பது 36.9 சதவீதம் பேருக்கு மட்டுமே சாத்தியமாகிறது.

மேலும், 23,000 குடும்ப மருத்துவர்கள், 28,000 பதிவு செய்யப்பட்ட நர்சுகள், ஆயிரக்கணக்கான சுகாதார நிபுணர்கள் தேவைப்படுவதாக அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

கனடாவில் தற்போது 1,000 பேருக்கு 2.8 மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். இது முநுஊனு சராசரியான 3.7-க்கு மிகக் குறைவு. இதனால் நிபுணர் சந்திப்புகளுக்கான காத்திருப்பு ஒரு மாதத்திற்கும் மேலாக நீள்கிறது.

ஆயிரக்கணக்கான தகுதியான வெளிநாட்டு மருத்துவர்கள் உரிமம் பெற முடியாமல் வேலை செய்யாமல் இருப்பதும் பிரச்சினையை மேலும் மோசமாக்குகிறது.

இந்தச் சம்பவம் கனடாவின் சுகாதார அமைப்பை மறுசீரமைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது என தெரிவிக்கப்படுகிறது.

# துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடையவர் கைது







கனடாவின் அல்பர்டா மாகாணம், கிராண்டே பிரேரி அருகே சனிக்கிழமை அதிகாலை நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், 42 வயது நபர் மீது இரண்டாம் நிலை கொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கிராண்டே பிரேரி கவுண்டியில் உள்ள ரேஞ்ச் ரோடு 35 மற்றும் டவுன்ஷிப் ரோடு 730 சந்திக்கும் கிராமப்புற வீதியில் துப்பாக்கிச்சூடு நடந்ததாக தகவல் கிடைத்ததையடுத்து, கிராண்டே பிரேரி கிராமப்புற பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றனர்.

அங்கு அவசர சேவைகள் சென்றபோது, இரண்டு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தனர். உயிரிழந்தவர்கள் 54 வயதான டேவிட் லகேஸ் மற்றும் 44 வயதான மிஷெல் லகேஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆரம்ப விசாரணையில் சந்தேக நபர் ஒருவர் இருப்பது தெரிய வந்ததைத் தொடர்ந்து, அல்பர்டா குற்ற விசாரணைப் பிரிவு விசாரணையின் பொறுப்பை ஏற்றது. இதனையடுத்து, காலை 11.30 மணியளவில் வடமேற்கு அல்பர்டா முழுவதும் 'ஆபத்தான நபர்' எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அந்த எச்சரிக்கையில், சந்தேக நபர் ஆயுதம் தாங்கியவராகவும், ஏற்கனவே பலரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டது. அவர் கருப்பு நிற லொறி ஒன்றில் தப்பிச் சென்றார் என தெரிவிக்கப்பட்டது.

மதியம் 1 மணியளவில், மக்லென்னன், அல்பர்டா பகுதியில் சந்தேக நபரின் வாகனத்தை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

பொதுமக்கள் பாதுகாப்பிற்காக முன்கூட்டியே தயார் நிலையில் இருந்த அவசர நடவடிக்கை குழு அங்கு அனுப்பப்பட்டு, சந்தேக நபர் பாதுகாப்பாக கைது செய்யப்பட்டார்.

உயிரிழந்தவர்களும் சந்தேக நபரும் ஒருவரையொருவர் அறிந்தவர்களே என பொலிஸ் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, 42 வயதான கர்டிஸ் பிலிப் ஹாலடே மீது இரண்டு இரண்டாம் நிலை கொலை குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.